DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 318/2025** | |
| Prosecution Witness | | | : | **PW - 3** | |
| Name | : | திரு.ஜெயசந்திரன் | Occupation | : | இரண்டாம் நிலை காவலர், திருநீலக்குடி |
| Father's Name/ Husband | : | ஜெயக்குமார் | | | |
| Village | : | | Age | : | 35 |
| Taluk | : | திருவிடைமருதூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24th day of February 2026. 24-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.15**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநீலக்குடி காவல் நிலையத்தில் இரண்டாம் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அதே திருநீலக்குடி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது , 03.11.2023 ஆம் தேதி காலை 10.45 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு என் பழனிவேல் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது , போன் மூலம் கிடைத்த தகவலை பெற்று , நானும் தலைமை காவலர் எழில்மாறன் ஆகியோர் உதவி ஆய்வாளருடன் புறப்பட்டு , திருநாகேஸ்வரம் கடை வீதி போய் பார்த்த போது, ஆரோக்கியராஜ் த/பெ வென்னீஸ் என்பவர் தன் கையில் கத்தியை வைத்துக்கொண்டு, என் கிட்டக்க வந்தா குத்திவிடுவேன், நான் பெரிய ரவுடி என்று மிரட்டிக்கொண்டிருந்தார். பொது மக்கள் உதவியுடன் எதிரியை சுற்றி வளைத்து பிடித்து , நிலையம் கொண்டு வந்தோம் . ஆய்வாளர் எதிரியை என் முன்னிலையிலும் எழில்மாறன் முன்னிலையிலும் விசாரித்து , ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார் . அதனடிப்படையில் எதிரியிடமிருந்து கத்தியை ஆய்வாளர் கைப்பற்றினார்.

அதற்கான கைப்பற்றுதல் மகஜரிலும் நானும் எழில்மாறனும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு உதவி ஆய்வாளர் தான் காலை 10.45 மணிக்கு தகவல் சொன்னார். நாங்கள் அனைவரும் சம்பவயிடத்திற்கு காலை 11 மணிக்கு போனோம். சம்பவம் நடந்து முடிந்து சம்பவயிடத்தில் ஒரு 1/2 மணி நேரம் இருந்தோம். இந்த சம்பவம் குறித்து தனிப்பட்ட முறையில் யாரும் புகார் கொடுத்தார்களா, இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார்களா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் காலை 10.30 மணிக்கு எதிரியை கைது செய்த போது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி . கைப்பற்றுதல் மகஜரில் நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரி. நாங்கள் அனைவரும் யூனிபார்மில் தான் நானும் ஜெயசந்திரனும் ஒரு இருசக்கர வாகனத்திலும், உதவி ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும் போனோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் திருநாகேஸ்வரம் கடை வீதியின் இருபுறமும் கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ளது என்றால் ஆமாம். அன்றைய தினம் எங்களுக்கு என்று தனியாக வருகை பதிவேடு மற்றும் பணி பதிவேடு உள்ளது . பணி பதிவேட்டில் அன்றைய தினம் எனக்கு என்ன பணி உள்ளது , என்ன பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் ஆமாம் . திருநாகேஸ்வரம் கடை தெரு என்பது 3 வீதிகள் சந்திக்கக்கூடிய முச்சந்தி என்றால் ஆமாம். 2016 க்கு பின்பு 3 வீதிகளும் சந்திக்கக்கூடிய மைய்யப்பகுதியில் 3 வீதிகளையும் பார்க்கும் வண்ணம் CCTV பொறுத்தப்பட்டது என்றால் ஆமாம். CCTV பதிவுகளை வாங்கி பார்த்தால் அந்தயிடத்திற்கு எதிரி வந்தாரா சம்பவம் நடந்தது உண்மையா என்ற விவரம் தெரியவரும் என்றால் ஆமாம் . அதை வாங்கி ஆய்வாளர்

பார்த்தாரா என்றால் தெரியாது. சம்பவயிடத்திற்கு அருகில் இருக்கும் நபர்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக போடவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் போலிசாரை தவிர தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரி. ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்த காவலர் பெயர் தெரியாது. எங்கள் காவல் நிலையத்தில் கணினி தட்டச்சு செய்யும் காவலரின் பெயர் புவனேஸ்வரி. ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது பக்கத்தில் எதிரியை காலை 10.30 மணிக்கே கைது செய்ததாக உள்ளது என்றால் சரி. கைப்பற்றுதல் மகஜரில் நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த வழக்கில் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லப்படும் பொது மக்கள் யாரும் சாட்சியாக போடவில்லை என்றால் சரி . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கும்பகோணம் டூ காரைக்கால் ரோடு நேர் ரோடு என்றால் ஆமாம். 100 மீ தொலைவில் இருந்து வரும் நபர்களை பார்க்க முடியும் என்றால் சரி. அவர் போலிசாரை கண்டவுடன் ஓட முயற்சித்தாரா என்றால் இல்லை. மேற்படி சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல . சா.பொ.1 போன்ற கத்தி இரும்பு கடையில் கிடைக்கும் என்றால் சரி . இந்த வழக்கில் சாட்சியாக இருக்கக்கூடியவர் என்னுடைய மேல் அதிகாரிகள் என்றால் சரி . எதிரியை வீட்டில் இருந்து அழைத்து சென்று எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . என்னுடைய மேல் அதிகாரிகளை அனுசரித்து நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தகாத வார்த்தைகளால் திட்டிவும் இல்லை , பொது மக்களை மிரட்டவும் இல்லை, சம்பவ இடத்தில் இல்லவே இல்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை , எதிரியிடமிருந்து எந்த சான்று பொருளும்

**கைப்பற்றப்படவில்லை, அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

**முடிக்கப்பட்ட நேரம்:12.32**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 318/2025** | |
| Prosecution Witness | | | : | **PW - 2** | |
| Name | : | திரு.எழில்மாறன் | Occupation | : | தலைமை காவலர், நாச்சியார்கோவில் |
| Father's Name/ Husband | : | கோவிந்தராஜன் | | | |
| Village | : | | Age | : | 38 |
| Taluk | : | கும்பகோணம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24th day of February 2026. 24-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.57**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருநீலக்குடி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, 03.11.2023 ஆம் தேதி காலை 11.00 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு என் பழனிவேல் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது, போன் மூலம் கிடைத்த தகவலை பெற்று, நானும் இரண்டாம் நிலை காவலர் 1785 ஜெயசந்திரன் ஆகியோர் உதவி ஆய்வாளருடன் புறப்பட்டு, திருநாகேஸ்வரம் கடை வீதி போய் பார்த்த போது ஆரோக்கியராஜ் த/பெ வென்னீஸ் என்பவர் தன் கையில் கத்தியை வைத்துக்கொண்டு, இந்த ஏரியாவிலேயே நான் தான் பெரிய ரவுடி, தகாத வார்த்தைகளால் பேசி கிட்ட வந்து யாராவது வந்தீங்கனா வெட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டிக்கொண்டிருந்தார். போக்குவரத்திற்கு இடைஞ்சலாக எதிரி சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். பொது மக்கள் உதவியுடன் நாங்கள் எதிரியை பிடித்து நிலையம் கொண்டு வந்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தோம். திருநீலக்குடி காவல் நிலையத்தில்

வைத்து, என் முன்னிலையிலும் ஜெயசந்திரன் முன்னிலையிலும் ஆய்வாளர் எதிரியை விசாரித்த போது , எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 2 ஆகும்.** ஆய்வாளர் மகஜரில் எங்கள் முன்னிலையில் அந்த கத்தியை கைப்பற்றினார். அந்த கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். 36 செமீ நீளமுள்ள கத்தி ஒன்று அதில் வெட்டும் இரும்பு பாகம் 22 செமீ, அதில் இரும்பு பூணுடன் கூடிய மரக்கைப்பிடி 14 செமீ, மரக்கைப்பிடியில் வளைந்த இரும்பு பாகம் 20 செமீ. அந்த கத்தி **சா.பொ.1 ஆகும்.** கத்தி கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ. 3 ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு உதவி ஆய்வாளர் காலை 10.45 மணிக்கு தகவல் சொன்னார். நாங்கள் அனைவரும் சம்பவயிடத்திற்கு காலை 11 மணிக்கு போனோம். நாங்கள் அனைவரும் யூனிபார்மில் தான் நானும் ஜெயசந்திரனும் ஒரு இருசக்கர வாகனத்திலும் , உதவி ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும் போனோம். சம்பவம் முடிந்த ஒரு 15 நிமிடங்கள் சம்பவயிடத்தில் இருந்தோம் . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் திருநாகேஸ்வரம் கடை வீதியின் இருபுறமும் கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ளது என்றால் ஆமாம் . அன்றைய தினம் எங்களுக்கு என்று தனியாக வருகை பதிவேடு மற்றும் பணி பதிவேடு உள்ளது . பணி பதிவேட்டில் அன்றைய தினம் எனக்கு என்ன பணி உள்ளது, என்ன பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் ஆமாம் . திருநாகேஸ்வரம் கடை தெரு என்பது 3 வீதிகள் சந்திக்கக்கூடிய

முச்சந்தி என்றால் ஆமாம். 2016 க்கு பின்பு 3 வீதிகளும் சந்திக்கக்கூடிய மைய்யப்பகுதியில் 3 வீதிகளையும் பார்க்கும் வண்ணம் CCTV பொறுத்தப்பட்டது என்றால் ஆமாம். CCTV பதிவுகளை வாங்கி பார்த்தால் அந்தயிடத்திற்கு எதிரி வந்தாரா சம்பவம் நடந்தது உண்மையா என்ற விவரம் தெரியவரும் என்றால் ஆமாம் . அதை வாங்கி ஆய்வாளர் பார்த்தாரா என்றால் தெரியாது. சம்பவயிடத்திற்கு அருகில் இருக்கும் நபர்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக போடவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் போலிசாரை தவிர தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரி. ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்த காவலர் பெயர் தெரியாது. எங்கள் காவல் நிலையத்தில் கணினி தட்டச்சு செய்யும் காவலரின் பெயர் புவனேஸ்வரி. ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது பக்கத்தில் எதிரியை காலை 10.30 மணிக்கே கைது செய்ததாக உள்ளது என்றால் சரி. கைப்பற்றுதல் மகஜரில் நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த வழக்கில் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லப்படும் பொது மக்கள் யாரும் சாட்சியாக போடவில்லை என்றால் சரி . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கும்பகோணம் டூ காரைக்கால் ரோடு நேர் ரோடு என்றால் ஆமாம். 100 மீ தொலைவில் இருந்து வரும் நபர்களை பார்க்க முடியும் என்றால் சரி. அவர் போலிசாரை கண்டவுடன் ஓட முயற்சித்தாரா என்றால் இல்லை. மேற்படி சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல . புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல . சா.பொ.1 போன்ற கத்தி இரும்பு கடையில் கிடைக்கும் என்றால் சரி . இந்த வழக்கில் சாட்சியாக இருக்கக்கூடியவர் என்னுடைய மேல் அதிகாரிகள் என்றால் சரி . எதிரியை வீட்டில் இருந்து அழைத்து சென்று எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . என்னுடைய மேல்

அதிகாரிகளை அனுசரித்து நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தகாத வார்த்தைகளால் திட்டிவும் இல்லை, பொது மக்களை மிரட்டவும் இல்லை, சம்பவ இடத்தில் இல்லவே இல்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை, எதிரியிடமிருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை, அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்:12.13**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">S.C : 318/2025</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 1</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு.பழனிவேல்</td><td rowspan="2" colspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">சிறப்பு உதவி ஆய்வாளர், திருநீலக்குடி</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>நடராஜன்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td></td><td rowspan="2" colspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">57</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>திருவிடைமருதூர்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24th day of February 2026. 24-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.37**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநீலக்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதே காவல் நிலையத்தில், 03.11.2023 ஆம் தேதி காலை 11.00 நான் நிலைய பொறுப்பில் இருந்த போது, போன் மூலம் கிடைத்த தகவலை பெற்று, நானும் முதல் நிலை காவலர் 196 எழில்மாறன் மற்றும் இரண்டாம் நிலை காவலர் 1785 ஜெயசந்திரன் ஆகியோர் புறப்பட்டு, திருநாகேஸ்வரம் கடை வீதி சென்று, பார்வையிட்ட போது அங்கு அரிவாளை காட்டி ஒரு நபர் பொது மக்களை மிரட்டிக்கொண்டு போக்குவரத்திற்கு இடையூராக இருந்தவரை பிடிக்க முயன்ற போது, கிட்ட வந்தால் உங்களையும் குத்துவேன், வெட்டுவேன் என்று மிரட்டினார். பின்னர் உடன் வந்த காவலர் மற்றும் பொது மக்கள் உதவியுடன் அவரை பிடித்து நிலையம் கொண்டு வந்து, தனியறிக்கையுடன் எதிரியை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ. 1 ஆகும்.** என்னிடம் காண்பிக்கப்படும் கத்தி சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்தியது அல்ல. அவரை பிடித்து

விசாரிக்க அவர் பெயர் ஆரோக்கியராஜ் த /பெ. வென்னீஸ் கீழத்தெரு வடக்கரை, திருவிடைமருதூர் என்று தெரியவந்தது . ஆய்வாளரிடம் நடந்த விவரம் கூறினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

தகவல் கிடைத்த ஒரு 1/2 மணி நேரத்தில் நான் சம்பவயிடம் சென்றேன். நானும் மற்ற இரண்டு போலிசாரும் சேர்ந்து தான் போனோம். நான் என்னுடைய இருசக்கர வாகனத்திலும் , அவர்கள் இருவரும் தனித்தனியாக அவர்களுடைய இருசக்கர வாகனத்திலும் வந்தார்கள் . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் திருநாகேஸ்வரம் கடை வீதியின் இருபுறமும் கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ளது என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் சம்பவம் முடிந்து ஒரு 15 நிமிடம் அங்கு இருந்தேன். சம்பவயிடத்திற்கு நாங்கள் 3 பேருமே யூனிபார்மில் தான் போனோம். அன்றைய தினம் எங்களுக்கு என்று தனியாக வருகை பதிவேடு மற்றும் பணி பதிவேடு உள்ளது . பணி பதிவேட்டில் அன்றைய தினம் எனக்கு என்ன பணி உள்ளது , என்ன பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் ஆமாம் . திருநாகேஸ்வரம் கடை தெரு என்பது 3 வீதிகள் சந்திக்கக்கூடிய முச்சந்தி என்றால் ஆமாம். 2016 க்கு பின்பு 3 வீதிகளும் சந்திக்கக்கூடிய மையப்பகுதியில் 3 வீதிகளையும் பார்க்கும் வண்ணம் CCTV பொறுத்தப்பட்டது என்றால் ஆமாம். CCTV பதிவுகளை வாங்கி பார்த்தால் அந்தயிடத்திற்கு எதிரி வந்தாரா சம்பவம் நடந்தது உண்மையா என்ற விவரம் தெரியவரும் என்றால் ஆமாம் . அதை வாங்கி ஆய்வாளர் பார்த்தாரா என்றால் தெரியாது. சம்பவயிடத்திற்கு அருகில் இருக்கும் நபர்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக போடவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் போலிசாரை தவிர தனி நபர் சாட்சிகள் யாரும்

இல்லை என்றால் சரி . இந்த வழக்கில் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லப்படும் பொது மக்கள் யாரும் சாட்சியாக போடவில்லை என்றால் சரி. எங்கள் காவல் நிலையத்தில் கணினி தட்டச்சு செய்யும் காவலரின் பெயர் புவனேஸ்வரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கும்பகோணம் டூ காரைக்கால் ரோடு நேர் ரோடு என்றால் ஆமாம் . 100 மீ தொலைவில் இருந்து வரும் நபர்களை பார்க்க முடியும் என்றால் சரி. அவர் போலிசாரை கண்டவுடன் ஓட முயற்சித்தாரா என்றால் இல்லை. தனி அறிக்கை தயார் செய்த 1/2 மணி நேரமானது. அரிவாள், கத்தி இரண்டும் வெவ்வேறான ஆயுதம் என்றால் ஆமாம். மேற்படி சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல . புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரியை வீட்டில் இருந்து அழைத்து சென்று எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்:11.56**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.